பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 10 (22 4 68) திங்கள் ★ வெளியூர்: சித்திரை 11 (23 4-68) செவ்வாய் [இதழ்: 258

ஆலைத் தொழிலாளருக்கு அதிகாரி தரும் உறுதிமொழி

புதுடில்லி, ஏப். 21—

"தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தமது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் வரையில், தமிழகத்தில் உள்ள ஏழு பஞ்சாலைகள் மூடப்படமாட்டாது; அண்ணா அவர்கள் வந்ததும் அந்த ஆலைகள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்"

என்று மத்திய வணிகத்துறை அமைச்சகத்தின் தனிச் செயலாளர் திரு. பி. என். பானர்ஜி, தொழிலாளர் மாநாட்டில் பேசுகையில் உறுதிமொழியளித்தார்.

அண்ணாவுக்கு நீக்ரோவர் வரவேற்பு

உரிமையற்று வாழும் மக்களிடை அளவளாவல்

'எம்பயர்' கட்டிடத்தின் உச்சிக்குச் சென்றார்; நியூயார்க் நகரின் குடியிருப்புகளைக் கண்டார்

நியூஹேவன், ஏப். 22

பேரறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கச் சுற்றுப்பயணத்தில் இன்று நான்காம் நாள். உலகத்துப் பேரறிஞர்களில் பெருமைக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்துச் சிறப்புச் செய்யும் யேல் பல்கலைக் கழகத்தின் டிமோத்தி டுவைப் கல்லூரியின் விருந்தினரால் அறிஞர் அண்ணா அவர்கள் இன்று முதல் தங்கயிருககிறார். இன்று பத்திரிகையாளருடன் கலந்துரையாடுவது தவிர வேறெந்தப் பெரு நிகழ்ச்சியிலும் அண்ணா அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

பேரறிஞர் அண்ணா அமெரிக்கப் பயணத்தின் முக்கிய நிகழ்ச்சியே யேல் பல்கலைக் கழகத்தில் அவர் தங்கியிருக்கிற காலந்தான். இன்று முதல் நான்கைந்து நாட்கள் அவர் பல்கலைக் கழகத்திலேயே தங்கியிருந்து, மாணவர்—ஆசிரியர்களுடனே உண்டு உரையாடி, பல்வேறு பிரச்சினைகளில் மாணவரின் ஐயந்தவிர்த்து, அறிவினைப் பெருக்கும் பணிகளில் ஈடுபட இருக்கிறார். எந்த நோக்கத்தோடு அமெரிக்கரல்லாத முதல் மன்தராய் தமிழரான அண்ணா அவர்களைத் தேர்ந்தெடுத்துச் சிறப்பிக்கிறார்களோ, அதற்கேற்ற வகையில் அண்ணா அவர்களின் ஆன்றவிந்து அடங்கிய சான்றாண்மையை, அவர்கள், நேரில் புரிந்து கொள்ள இருக்கிறார்கள்.

அன்பு ததும்ப வரவேற்பு-மகிழ்ச்சிமிக்க உரையாடல்

நியூயார்க், ஏப். 21—

நியூயார்க் நகருக்கு நேற்று வந்து சேர்ந்த தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு பார்வையிடச் சென்ற முதல் இடம், நகரின் ஒதுக்குப்புறத்தில் உள்ள நீக்ரோக்கள் வாழும் புறநகரப் பகுதியாகும்.

அண்ணா அவர்கள், கால்நடையாகவே சென்று அங்கு பார்வையிட்டார்.

வெள்ளையரால் ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அடிமைகள்போல உரிமையற்ற நிலையில் நீக்ரோக்கள் வாழ்ந்துவரும் இந்தப் பகுதிகளை, வெளிநாட்டுத் தலைவர்கள் பார்ப்பது என்பது மிக அரிதாகும்; எப்போதாவது, யாராவது சிலர்தான் அங்கு சென்று பார்ப்பது வழக்கம்.

அண்ணா அவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றபோது, அவருடன் ஐ.நா.-வில் இந்தியப் பிரதிநிதியாகவுள்ள திரு ஜி. பார்த்தசாரதியும் சென்றார்.

நீக்ரோ நகரமைப்பின் தலைவரும், நீக்ரோ மக்களின் அரசியல் தலைவருமான திரு. பேர்சி சட்டன், அண்ணாவையும் திரு. பார்த்தசாரதியையும் வரவேற்றார்; நகரின் சுகாதாரம், கல்வி, குடியிருப்பு முதலிய வசதிகளையும், இன வேற்றுமைப் பிரச்சினைகளையும் பற்றி இருவரும் விவாதித்தனர்.

அண்ணா காட்டிய ஆர்வம்

வேளாண்மைத் தொழில் மிகுந்துள்ள (கிராமப்) பகுதிகளிலிருந்து நகருக்கு வந்து குடியேறும் ஏழை மக்களை நகரில் எந்த முறையில் குடியமர்த்துகிறார்கள் என்பதையும், அவர்களுக்கு எப்படிப் பயிற்சியளித்து வேலை வாய்ப்பளிக்கிறார்கள் என்பதையும் அறிந்துகொள்வதில் அண்ணா அவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள்.

ஹால்ரேம் நகரின் வீதிகளிலே நீக்ரோ தலைவருடன் சென்ற அண்ணா அவர்கள், வழியில் பல இடங்களில் அடிக்கடி நின்று மக்களுடன் உரையாடி மகிழ்ந்தார்; அங்கிருந்த மக்கள், அண்ணா அவர்களை அன்பு ததும்ப வரவேற்று மகிழ்ந்தனர்.

அங்கு, குலைந்துபோய்க் கிடக்கும் கட்டிடங்களைச் சீர்செய்யும் பணியில், பல இளம் அமெரிக்க வெள்ளையர்கள் (ஆடவரும் பெண்டிருமாக) ஈடுபட்டிருந்ததை அண்ணா அவர்கள் பார்த்தார்கள்; வெளிநாட்டுத் தலைவர்கள் வந்திருப்பதைக் கண்டு அந்த வெள்ளையர்களும் வரவேற்றனர்.

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

கென்னடி விமான நிலையம் கண்டிராத காட்சி

நேற்று முன்தினம் நியூயார்க் நகரின் கென்னடி விமான நிலையத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் வரவேற்பு, 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பதைப் பறைசாற்றுவதாய் இருந்தது.

சென்னை நிகழ்ச்சிகள் பற்றிய நீதி விசாரணை

ஏப். 29-ஆம் நாளுக்கு ஒத்திவைப்பு

சம்மன் பெற்றிருக்கும் சாட்சிகளுக்கு முக்கிய அறிவிப்பு

-சென்னை, ஏப். 22—

சென்னையில் பஸ் தொழிலாளர்—மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட நீதிபதியின் நீதி விசாரணை, இன்று காலை 10-மணியளவில் தொடங்கியது.

பஸ் தொழிலாளர்கள் சார்பில் வழக்கறிஞர் திரு. வெங்கட்ராமனும், போலீசுத் தரப்பில் வழக்கறிஞர் இராசமாணிக்கமும், வாதாட வந்திருந்தனர்.

நீதி விசாரணைக்குத் துணைபுரிய வழக்கறிஞர் திரு. வசந்தபாய் வந்திருந்தார்.

போக்குவரத்துத் துறையின் சார்பில், தொடர்புடைய சான்றேடுகளெல்லாம் தாக்கல் செய்யப்பட்டன.

பஸ் தொழிலாளர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கேற்ப, விசாரணை இம்மாதம் 29-ஆம் நாளுக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

நாளை (ஏப். 23) முதல் ஏப். 26-ஆம் நாள் முடிய சாட்சி கூறுவதற்காக ஏற்கனவே சம்மன்கள் அனுப்பப்பட்டுள்ளன. இப்போது விசாரணை தள்ளி வைக்கப்பட்டு விட்டதால், 'சம்மன்' பெற்றிருப்பவர்கள், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் (ஏப். 23 முதல் 26 வரை) வரவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுவதுடன், அவர்கள் எப்போது வரவேண்டும் என்று பின்னர் தனியாக அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விசாரணையில் சுமார் 500 பேர் சாட்சியமளிக்க முன் வந்துள்ளனர்.

மத்திய அரசின் கண்துடைப்பு வேலை

ஆலைத் தொழிலாளர்களுக்கு உதவத் தவறிவிட்டது

டெல்லியில் அமைச்சர் மாதவன் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 21—

"ஆலைகள் மூடப்படுவதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை யிழக்கும் நிலைமையைச் சமாளிக்க, மத்திய அரசு தாமதமின்றி நிதியுதவியளிக்க வேண்டும்"

என்று, தமிழகத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் வற்புறுத்தினார்.

இங்கு, நடந்த தொழிலாளர் மாநாட்டில் அமைச்சர் மாதவன் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

'துணித் தொழில் நிறுவனம் (டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன்) அமைப்பது என்பது வெறும் கண் துடைப்பேயாகும்.

பழைய ஆலைகளைப் புதுப்பிக்கவும், நவீனப்படுத்தவும் ரூ. 400 கோடி மூலதனம் தேவை என்பதை மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கும்போது, ரூ. 1 கோடி மட்டுமே மூலதனமாகக் கொண்ட இந்த நிறுவனம், எப்படி ஆறு ஆலைகளைத் திறக்க உதவ முடியும்?

மூடப்படும் நிலைமையில் உள்ள ஆலைகளுக்கு எந்த வகையிலேனும் மத்திய அரசின் உதவி மொத்தமாகக் கிடைத்தாக வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட தொழில் நெருக்கடிக்குள்ளாகுமானல் அதற்குக் கைகொடுத்து உதவும் வகையிலேயே மத்திய அரசின் வரிவிதிப்புக் கொள்கை இருக்க வேண்டும்.

தமிழகத்தில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் திட்டங்களுக்குப் பணம் தேவைப்படுகிறது; இதற்கு மத்திய அரசு உதவியின்றி மாநில அரசு மட்டுமே உதவிட இயலாது.

மேலும், நூலுக்கும், கைத்தறித் துணிகளுக்கும் மார்க்கெட்டு கண்டுபிடித்தாக வேண்டியுள்ளது.

ஆலைத் தொழிலாளருக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைச் சமாளிக்க, தொழிலாளருக்கு உதவ மத்திய அரசு தவறிவிட்டது.

ஒவ்வொரு நாளும் எங்களுக்கு, ஆலைகள் மூடப்படும் செய்தி வந்தவண்ணமிருக்கிறது. இந்தப் பிரச்சினையை மத்திய அரசு கடுமையானதாக எடுத்துக் கொள்ளவில்லை."

எரிமலை குமுறுகிறது!

மணிலா, ஏப். 21—

மணிலாவுக்குத் தென் கிழக்கில் 200 மைல் தூரத்திலுள்ள 8,000 அடி உயரமுள்ள எரிமலை குமுறிக் கொண்டிருக்கிறது! அதிலிருந்து கிளம்பும் சாம்பல், அருகிலுள்ள இரு நகரங்கள் மீது விழுந்து குவிகிறது!

சில நாட்களுக்குள் அந்த எரிமலையின் குமுறல் கடுமையாகி, நெருப்பையும் சாம்பலையும் வீசி அழிவை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

எரிமலைக்கு எட்டு மைல் தூரத்தில் வசிக்கும் 75,000 மக்கள், பாதுகாப்பான இடங்களைத் தேடிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

1814-ல் இந்த எரிமலை குமுறி நெருப்பைக் கக்கியபோது, மூன்று நகரங்கள் புதையுண்டன; 1,200 பேர் உயிரிழந்தனர்!

1916-க்குப் பிறகு இந்த எரிமலை, 31 தடவை குமுறியிருக்கிறது!

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 10 (22—4—68) திங்கள்

இதோ ஓர் இரக்கமற்ற அரக்கர்!

மூப்படைந்த அரசியல் தலைவர்கள் பட்டியலில் முதலிடம் பெறவேண்டிய வயதினைப் பெற்றிருப்பவர் பக்தவத்சலனார் அவர்கள்; வயதில்தான் மூத்தவராக அவர் இருக்கின்றாரே அல்லாது, அவ்வயதுக்கேற்பப் பெற்றிருக்க வேண்டிய நல்ல நெஞ்சையும், நாவளத்தையும் அவர் பெற்றிருக்கவில்லை.

இதுவுமன்றி, அவருக்கு வயதுதான் கூடிக்கொண்டே போகிறதே அல்லாது, பதவி மோகம் சிறிதளவாவது குறைந்ததாகக் காணோம். வயது கூடக்கூட, தமக்கிருக்கக்கூடிய பதவி ஆசையையும் அவர் மேலும் மேலும் பெருக்கிக்கொண்டே வருகின்றார்.

தலைக்கேறியுள்ள அவருடைய பதவி வெறி, 'எதைப் பேசுகின்றோம்—எதற்காகப் பேசுகின்கிறோம்—யாரைப் பற்றிப் பேசுகின்றோம்—எப்படிப் பேசுகின்றோம்' என்பன பற்றியெல்லாம் ஒரு கணம் சிந்திக்கக்கூட விடாமல் அவரைத் தடுத்துவருகிறது. எனவே, நஞ்சை ஒத்த கருத்துக்களை நெஞ்சம் பதறாமல்—நா கூசாமல், அரசியல் கணைகளாகத் தொடுத்து வருகின்றார். அக்கணைகள் அனைத்தும், அவருடைய எரியுள்ளத்தையும் தீ நாக்கையும் விளக்கிக் காட்டுவனவாக அமைந்துவிடுகின்றன. அதன் விளைவாக, நாட்டு மக்களிடையே பக்தவத்சலனார் அவர்கள் மேலும் மேலும் மதிப்பிழந்து போய்விடுகின்றார்.

அண்மையில் சென்னை நகரில் நடைபெற்ற விரும்பத்தகாததும் வருந்தத்தக்கதுமான மாணவர்—போக்குவரத்து ஊழியர் மோதுதலையும், அதன் உண்மை அறிய ஏற்படுத்தியிருக்கின்ற நீதி விசாரணை ஏற்பாட்டையும் ஒரு புகலாக வைத்துக்கொண்டு இன்றையத் தமிழக அரசையும், குறிப்பாகப் பொதுப் பணித் துறை அமைச்சர் கருணாநிதி அவர்களையும் தூற்றிப் பேசுவதில் முனைந்திருக்கின்ற மற்ற காங்கிரசுத் தலைவர்களைப் போன்றே பக்தவத்சலனார் அவர்களும், தொடை தட்டித் தீவிரமாகக் கிளம்பியிருக்கின்றார்.

இன்றைய ஆட்சியில், தாம் தவறு எனக் கண்டதைக் காங்கிரசுத் தலைவர்களோ, பக்தவத்சலனாரோ கண்டிக்கத்தான் செய்வார்கள்; அவ்வாறு கண்டிப்பது அவர்களுக்குள்ள உரிமையாகும். அந்த உரிமை காப்பாற்றப்பட வேண்டியதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும்.

ஆனால், தாம் தவறு எனக் கண்டதைச் சுட்டிக்காட்டி, அத்தவறுக்காக—தாம் விரும்பியவண்ணம்—அரசையோ அல்லது அமைச்சர்களையோ, 'பதவியைவிட்டு வெளியேறிவிட வேண்டும்' எனக் கோருவதுதான் முறை—நியாயம்; இதுதான் அரசியல் உலகில் இதுவரை நிகழ்ந்து வந்திருப்பது; இதே நியாயமான முறையைத்தான், நமது கழகம், எதிர்க் கட்சியாக இருந்துவந்த காலத்தில் பின்பற்றி வந்திருக்கிறது.

1965-ல் முதலமைச்சராக இருந்துவந்த இதே பக்தவத்சலனார், நாயைச் சுட்டுவீழ்த்துவதுபோல் தமிழ் மக்கள் பலரைச் சுட்டுப் பிணமாக்கிக் கற்பாறைபோல் கலங்காது கோலோச்சியதைக் கண்டு, இவரைப் பதவியைவிட்டு விலகும்படிதான் நமது கழகத் தலைவர்கள் கோரினார்களே அல்லாது, இம்முதியவரை, 'தூக்கு மாட்டிக்கொண்டு' சாகச் சொல்லவில்லை!

முதலமைச்சர் பதவியைப் பறிகொடுத்துவிட்டிருக்கின்ற நிலையில் இன்று பக்தவத்சலனார் அவர்கள், பொதுப் பணித்துறை அமைச்சர் கருணாநிதி அவர்களைப் பார்த்து—இங்கு எழுதிக் காட்டவே நமது மனம் இடம் கொடுக்காத நிலையில்—கோரியுள்ள கோரிக்கையைப் படித்த நாம், 'இவருக்கு இருப்பதும் நெஞ்சுதானா?' என்ற வியப்பில் ஆழ்ந்தோம்; 'தமிழக அரசியல், இந்த அளவுக்கு மாசு அடைந்துகிடக்கிறதே' என்ற வேதனையும் நம்மைப் பற்றிக்கொண்டது.

வயதில் முதிர்ந்த பக்தவத்சலனார் அவர்கள், என்ன கோரினார்—அக் கல்நெஞ்சக் கோரிக்கைக்குப் பொதுப் பணித்துறை அமைச்சர் என்ன விளக்கம் தந்தார்—என்பதை, மேலே படியுங்கள். முதியவரான முன்னாள் முதலமைச்சர் பெற்றுள்ள அரசியல் பயிற்சியையும் பண்பையும், இளைஞர்களில் இளைஞரான நமது பொதுப் பணித்துறை அமைச்சர் பெற்றிருக்கின்ற அரசியல் பயிற்சியையும் பண்பையும் சீர்தூக்கிப் பாருங்கள்—'இரக்கமற்ற அரக்கர்' என அமைந்திட வேண்டியவர் எவர் என முடிவு கட்டிக் கொள்ளுங்கள்:—

"பழைய உள்துறை அமைச்சர் நந்தா பதவி விலகியதுபோல் நானும் பதவி விலகவேண்டும்—என்று பக்தவத்சலம் கூறியிருப்பது, அவருக்கு என்மீதுள்ள ஆத்திரத்தைக் காட்டுகிறதே தவிர, அவருக்குள்ள அரசியல் தெளிவைக் காட்டவில்லை!

"இராஜினாமா விஷயத்தில்கூட இரவல் உதாரணத்தைத் தேடுகிறாரே தவிர, 1965-ல், தாம் ஒரு எடுத்துக்காட்டாக இருந்து காட்ட முடியவில்லை! சுப்பிரமணியம் இராஜினாமாவையே, 'அவசர முடிவு' என்று அளந்துகோட்டியவர் பக்தவத்சலம்!

"பஸ் தொழிலாளர்—மாணவர் தகராறில், நான் பதவி விலக வேண்டுமென்பதற்குச் சரியான காரணத்தைப் பக்தவத்சலம் தெரிவிக்கவில்லை; எனக்கு அவரிடத்திலே நிரம்ப மதிப்பும், மரியாதையும் உண்டு. சென்னை நிகழ்ச்சிக்குப் பிறகு, நான், 'சிலப்பதிகார நெடுஞ்செழியப் பாண்டியனைப்போல் செத்திருக்க வேண்டும்' என்று, அறிக்கையில் கருத்தறிவித்துள்ளார்.

"இவ்வளவு பெரியவரிடமிருந்து இவ்வளவு அன்பான ஆசீர்வாதம் எனக்குக் கிடைத்திருப்பது என் பாக்கியமேயாகும். என் சாவில்தான் அவருக்கு எவ்வளவு நிம்மதி? பாளையங்கோட்டைக்குப் போகும் வழியிலேயே அதை எதிர்பார்த்தவரல்லவா அவர்?

"நெடுஞ்செழியப் பாண்டியனைப்போல் சாக வேண்டுமென்பதற்காக நான் நீதி தவறும் காரியம் எதிலும் ஈடுபடமாட்டேன்!

'பக்தவத்சலம் என் அகால முடிவை விரும்புவாரேயானால்—அவர் அகம் குளிரும் வகையில்—பர்மிய இளம அமைச்சர் அவுங்சானைப்போல் என் முடிவு அமைய வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்கான முயற்சியில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். சமீபத்திய வழக்குக்கூட அதனை நிரூபித்திருக்கிறது. அவர்கள் எண்ணம் ஈடேறும் நாள், அவர்களுக்கு மட்டுமல்ல—எனக்கும் இன்ப நாளாகும்."

—கா. க.

உலகப் பெருந்தலைவர்களில் ஒருவராக அறிஞர் அண்ணா

உறவு கொள்ளும் 'யேல்' பல்கலைக்கழகச் சிறப்பு

நியூஹேவன், ஏப். 22—

"தமிழக முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை, ஏப். 22-ம் நாள், இங்குள்ள யேல் பல்கலைக் கழகத்துக்குச் சிறப்பு விருந்தாளியாக வருகிறார். பல்கலைக் கழகத்தின் 'சப் பெல்லோஷிப்' என்னும் சிறப்பினைப் பெறும் தலைவராக இங்கு வருகைதரும் அவர், தமக்கு முன்பு இந்தச் சிறப்பினைப் பெற்ற பல தலைவர்களை நினைவுகூர்வார்.

"இந்தியாவில் அமெரிக்கத் தூதராகப் பணியாற்றிவரும் செஸ்டர் போல்ஸ், முன்னாள் அமெரிக்க அதிபர் ஹாரி ட்ரூமன் உட்பட டீன் அச்கீசன், ஜான் ஷேர்மான் கூப்பர், பாரி கோல்டுவாட்டர், அட்லாய் ஸ்டீவன்சன் போன்ற பெருமக்கள் ஏற்கனவே இந்தச் சிறப்புப் பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்"

இவ்வாறு, அமெரிக்க செய்தித் துறையின் பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது; இந்தச் சிறப்புச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

பெயர் வந்ததெப்படி?

ஹெண்டன் சப் என்பவர், யேல் பல்கலைக் கழக மாணவர்; பொதுப் பரச்சினைகளில் மாணவர்கள் அக்கறைகொள்வதற்கு ஊக்கமளிப்பதற்காக அவர், 1937-ல் நிதி வழங்கி ஓர் அறக் கட்டளை நிறுவினார். அவர் பெயரால், 'சப் பெல்லோஷிப்' என்று இது குறிப்பிடப்படுகிறது.

1949-ல் யேல் பல்கலைக் கழகம், இந்த அறக் கட்டளையை அதன் இன்றைய அமைப்புக்கு மாற்ற முடிவு செய்தது.

புதிய அமைப்பின்படி, திரு, அண்ணாதுரை போன்ற சிறந்த தலைவர்களைப் பல்கலைக் கழகத்துக்கு அழைத்து, நாலைந்து நாட்கள் விருந்தாளியாக ஏற்றுச் சிறப்புச் செய்கிறார்கள்; இவர்கள், மாணவர்களுடன் ஊடாடிப் பழகிக் கருத்துப் பரிமாறுகிறார்கள்.

விருப்பம்போல்...

யேல் பல்கலைக் கழகத்தில் டிமோத்தி டுவைட் கல்லூரியின் விருந்தினர் இல்லத்தில் தமிழக முதலமைச்சர் தங்குகிறார்; பெல்லோஷிப் ஏற்பாட்டினை நடத்திவருவது இந்தக் கல்லூரிதான். தம் விருப்பப்படி தமது நிகழ்ச்சி நிரலை அவர் வகுத்துக் கொள்வார். கல்லூரி மாணவர்களோடு தங்குவார்—அவர்களோடு உண்பார்—பழகுவார்—உரையாடுவார்; கருத்தரங்குகள் நடத்துவார்.

யேல் பல்கலைக்கழகத்தில் இருக்கையில், பல்கலைக் கழகத்தின் மற்றப் பிரிவுகளிலும் சங்கங்களிலும் தமக்கு விருப்பமான துறைகளில் அவர் ஈடுபடலாம்.

முக்கியக் குறிப்புகள்

யேல் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் தங்கியிருந்து படிக்கும் பல கல்லூரிகள் உண்டு; அவற்றில் ஒன்று டிமோத்தி டுவைட் கல்லூரி. பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தது இது; எனினும் இதற்கெனத் தனி மரபுகளும் சிறப்புக்களும் உண்டு.

மாணவர்களுக்கு இது கல்விப் பயிற்சி அளித்துவந்த போதிலும், கல்லூரியின் முக்கியக் குறிக்கோள், ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஒரு சமுதாயப் பலகணி ஏற்படுத்தித்தர வேண்டுமென்பதுதான். இப்போது ஏறத்தாழ 240 மாணவர்கள் இங்குள்ளனர். கல்லூரியில் இவர்கள் ஒன்று சேர்ந்து உண்டு—உறங்கி, விளையாடிக் களித்துக் கல்வி கற்கின்றனர். நல்ல நூலகங்களும், ஆலயங்களும், விளையாட்டு அறைகளும் உண்டு.

கல்லூரியில் தனி விளையாட்டுக் குழு ஒன்று உண்டு; மற்ற யேல் கல்லூரிகளிலுள்ள குழுக்களுடன் இது போட்டியிடுகிறது.

நாடகச் சங்கம் ஒன்றும் உண்டு; இது மாணவர்களின் கலை ஆர்வத்துக்கு ஊக்கமளிக்கிறது.

கல்லூரி தனது பல நிலையங்கள் குறித்துப் பெருமை கொள்ளலாம்; எனினும், அதன் தனிச் சிறப்பு 'சப் பெல்லோஷிப்' தான்.

திரு. அண்ணாதுரைபோன்ற தலைவர்களுடன் மாணவர்களுக்கு உறவு ஏற்படுத்திக் கொடுப்பது இந்தச் சிறப்பு அறக்கட்டளை தான் அல்லவா?

பல்கலைக் கழகத் திட்டத்தின் சிறப்பு!

'வகுப்புக்குப் போக வேண்டாம்; தேர்வுகள் எழுதவேண்டாம்; விருப்பம்போல் தாமே படித்துக் கொள்ளலாம்'—இப்படி ஒரு திட்டம் யேல் பல்கலைக் கழகத்தில் நடைபெறுகிறது.

'மன்றத்தின் படிப்பாளி' என்று திட்டத்திற்குப் பெயர்.

நன்கு ஆராய்ந்து பொறுக்கியெடுத்த சிற்சில மாணவர்களுக்கு மட்டுமே இந்தத் திட்டம்—அதுவும் படிப்பின் கடைசி ஆண்டில்தான்—இவ்வாறு 'கட்டவிழ்த்து' விடப்படுகிறது.

இது ஒரு புதுத் திட்டம் அல்ல—22 ஆண்டுகளாக இங்கு நடந்து வருகிறது.

எதற்காக இது?—சில மாணவர்கள், மற்றவர்களைவிட விரைவாக அறிவு முதிர்ச்சி பெறுகின்றனர்; இவர்களையும் மற்றவர்களைப்போல் வழக்கமான பாடத் திட்டங்களில் போட்டு உழல வைப்பது சரிப்படாது; இவர்கள், தமக்கு விருப்பமான துறையில் ஆராய்ச்சி அறிவை விருத்தி செய்துகொள்ள விட்டுவிட வேண்டும்—இதுதான் திட்டத்தின் கருத்து.

யேல் பல்கலைக் கழகத்தின் இயல்புக்கு ஏற்ற சான்றாகும் இந்தத் திட்டம்!

பிறர் காணாத துறைகளில் இறங்கி மற்றவர்களுக்கு வழிகாட்டும் துணிவு படைத்த மக்கள் நிறுவிய பல்கலைக் கழகம் இது!

குத்தகைப் பாக்கியை நான்கு ஆண்டுகளில் செலுத்துவதற்கு வசதி

வெளியேற்றும் நிலை உருவாகாமலிருக்க தமிழக அரசின் உடனடி நடவடிக்கை

ஆளுநர் பிறப்பித்த அவசரச் சட்டத்தின் விவரம்

சென்னை, ஏப். 22—

குத்தகைப் பாக்கிக்காக, சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் வெளியேற்றப்படும் நிலைமை உருவாகும் கட்டம் ஏற்படாமலிருக்கவும், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் காலாவதியாவதை முன்னிட்டும் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது; அதன்படி, நிலக் குத்தகைப் பாக்கி வைத்திருப்பவர்களை வெளியேற்ற இயலாது; 1972-க்குள் நான்கு தவணைகளில் அவர்கள் அதைச் செலுத்தலாம்; இதற்கு வகைசெய்யும் அவசரச் சட்டத்தை ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்கள் பிறப்பித்தார்; அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

1966 ஏப். 20-ம் நாளிலிருந்து இரண்டாண்டுக் காலம் அமுலிலிருந்த சென்னை சாகுபடி செய்யும் குத்தகைதாரர் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கும்) சட்டம் 1968 ஏப். 19-ம் நாள் பிற்பகலில் காலாவதியாகிவிட்டது. அதன் விளைவாக, சாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள மீது குத்தகைப் பாக்கிக்காக வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களுக்குள்ள பொருளாதார நிலையை எண்ணிப்பார்க்கையில், குத்தகை பாக்கியை அவர்கள் ஒருமொத்தமாக தீர்ப்பது இயலாததாக இருக்கிறது.

தமிழக அரசு இதைக் கவனமாக பரிசீலித்த பிறகு 1968 ஏப். 20-ம் நாள் நிலுவையுள்ள குத்தகைப் பாக்கிகள் அனைத்தையும் நான்கு சமமான ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த, சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களுக்கு வகை செய்யத் தீர்மானித்துள்ளது

இதன்படி, '1968-ம் ஆண்டு சென்னை சாகுபடி செய்யும் குத்தகைதாரர் (சிறப்பு விதிகள்) அவசரச் சட்டம்' என்று ஓர் அவசரச் சட்டத்தை தமிழகக் கவர்னர் பிறப்பித்திருக்கிறார்;

(3-ம் பக்கம் பார்க்க

சென்னை நகருக்கு மலிவு விலையில் காய்கறிகள்

அரசின் முயற்சி --- 100 ஏக்கர் நிலத்தில் தீவிர சாகுபடி

சென்னை, ஏப் 22—

திருப்பெரும்பூதூருக்கு அருகே தமிழக அரசு ஏற்படுத்தியுள்ள காய்கறிப் பண்ணையிலிருந்து—எல்லா வேலைகளும் குறித்தபடி நடந்து முடிந்தால்— இன்னும் ஆறு மாதங்களில் சென்னை நகருக்குக் காய்கறிகள், மலிவு விலையில் கிடைக்கும்.

திருப்பெரும்பூதூருக்கு அருகில் சோதனை முறையில் காய்கறிகள் பயிரிட 100 ஏக்கர் பரப்பு அளவில் தமிழக அரசு, ஒரு தீவிர சாகுபடித் திட்டத்தை அனுமதித்துள்ளது.

நூறு ஏக்கர் நிலத்தில் செய்யப்படும் காய்கறிச் சாகுபடி மூலம் ஆடிப் பட்டத்திலும் 600 டன் காய்கறிகள் கிடைக்கும்.

அத்துடன் மழைக் காலத்தில் இங்கிலீஷ் காய்கறிகள் எனப்படும் காரெட், சீமைமுள்ளங்கி, கோஸ் முதலியன பயிரிடப்படும்.

சோதனைத் திட்டம் வெற்றிகரமாக அமைந்தால், இந்தப் பண்ணையை 600 ஏக்கர் நிலமாக விரிவுபடுத்தவும், நிலத்தின் ஊறல் நிலையை மாற்றுவதற்கும், விதைகள் தயாரிப்பதற்கும், தேவையான இயந்திரங்கள் அமைக்கவும் அரசு உத்தேசித்திருக்கிறது.

இந்தப் பண்ணையை மேலும் விரிவுபடுத்துவதானது, நீர் கிடைக்கும் வாய்ப்பைப் பொறுத்தது; இது பற்றிய ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது; பாசனக் கிணறுகள் தோண்டப்படுகின்றன; 80 அடி ஆழம் தோண்டப்பட்டுள்ளது; இன்னும் 120 அடி தோண்ட வேண்டியுள்ளது.

புதர்களைச் சீர்திருத்தும் வேலைகள் தொடங்கி விட்டன.

"உயர்ந்த ரகக் காய்கறிகள் மார்க்கெட் விலையை விட ஓரளவுக்குக் குறைவாகக் கிடைக்கும்" என்று விவசாயக் (வாணிகப் பயிர்கள்) கூட்டு இயக்குநர் பஸ்லுல்லா கான் கூறினர்.

ஏக்கர் ஒன்றுக்கு நடைமுறைச் சாகுபடிச் செலவு ரூ 500; நிலத்தைச் சீர்படுத்தும் வேலை—இயந்திரங்கள் ஆகியவற்றிற்கு எல்லாம் சேர்த்து நூறு ஏக்கர் நிலத்திற்கு ரூ. 17 இலட்சம் செலவாகும்.

விவசாயப் பண்ணையின் கடைகளாக உதவும் வகையில், விவசாயத் துறையினர் இரண்டு விற்பனை நிலையங்களை சென்னை நகருக்குள் நிறுவ உத்தேசித்துள்ளனர்; இந்த இரண்டு விற்பனை நிலையங்களில் ஒன்று புதிய சட்டமன்ற விடுதிக்கு அருகிலும், மற்றொன்று அடையாறு கிரீன்வேஸ் சாலையிலும் நிறுவப்படும்!

நகரில், காய்கறிப் பண்ணையில் ஈடுபட்டுள்ளோருக்கு உயர்ந்த ரக விதைகளை இந்த நிலையங்கள் விநியோகம் செய்யும்.

வேலூரிலும் பாலர் அரங்கம்

குழந்தைகள் நிகழ்ச்சிக்கு சிறப்பிடம் தரப்படும்

சென்னை, ஏப். 19—

சென்னையில் அரசு நடத்திவரும் பாலர் அரங்கத்தைப்போல், வட ஆற்காடு மாவட்டத் தலைநகர் வேலூரில் ஒரு அரங்கம் விரைவில் ஏற்படுத்தப்படும்.

முன்பு கோட்டைப் பகுதியில் 'ஒபரா தியேட்டர்' என வழங்கப்பட்ட திரைப்படக் கொட்டகையில் இந்த அரங்கம் அமையும்.

வேலூர் பாலர் அரங்கம், சென்னையிலுள்ள பாலர் அரங்கத்தைப் போலவே நடத்தப்படும்; குழந்தைகளின் நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பிடம் தரப்படும்.

கழகக் கூட்டத்தில் காங்கிரசார் கைவரிசை!

கல்லெறிந்த ஒரு கயவன் பிடிபட்டான்

சேலம் 24-வது வட்டத் தி.மு.க. சார்பில், 16-4-68-ல் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர் ஏகாம்பரம் தலைமை வகித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் க இராசாராம் பி.ஏ., நகரச் செயலாளர் ஏ. மாரியப்பன் எம்.சி., தண்டபாணி (சுதந்தரா) ஆகியோர் பேசினர்.

நகரச் செயலாளர் ஏ. மாரியப்பன் பேசிக்கொண்டிருக்கும் போது காங்கிரசுக் கயவர்கள் சரமாரியாகக் கற்களைக் கூட்டத்தின்மீது எறிந்தனர்; இதனால் ஒரு தோழருக்கு மண்டை உடைந்தது; இன்னொரு தோழருக்கு நெஞ்சில் பலமான அடிபட்டு இரத்தம் கசிந்தது; மற்றொரு தோழருக்குக் காலில் பலமான அடிபட்டது; இதனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது; பொது மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது

பிறகு பாதுகாப்புக்கு வந்திருந்த போலீசார், கற்களை எறிந்ததாகக் கூறப்படும் ஒரு கயவனைப் பிடித்துக்கொண்டு சென்றனர். பிறகு கூட்டம் அமைதியாக நடைபெற்றது.

தோழர் க. இராசாராம் அவர்கள், காங்கிரசுக்காரர்களின் கயமைத்தனத்தைக் கண்டித்துப் பேசினர்.

ஆட்சி மொழித் திருத்தச் சட்டம் பற்றிய ஆந்திரத் தீர்மானம்

டில்லி பரிசிலிப்பதாக தகவல்

புதுடில்லி, ஏப் 20—

"ஆட்சி மொழிச் சட்டத் திருத்தம் பற்றி ஆந்திரச் சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை மத்தியஅரசு ஆராய்ந்து வருகிறது"

என்று உள்துறைத் துணை அமைச்சர் திரு. வி சி. சுக்லா, மக்களவையில் தெரிவித்தார்.

"நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்தின் மூலம் இந்தி பேசாத மக்களுக்கு நேரு வழங்கிய உறுதிமொழிக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பு ஏற்பட்டுள்ளபோதிலும், சட்டத் திருத்தத்துடன் சேர்த்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இந்தி பேசாத மக்களுக்குப் பாதகமாக அமைந்துள்ளது" என்பதே ஆந்திரச் சட்டமன்றத் தீர்மானத்தின் கருத்து.

உறுப்பினர் உரிமைச் சீட்டுகள்

கழகக் கிளைகளின்

செயலாளர்கள் --- அமைப்பாளர்களுக்கு

முக்கிய அறிவிப்பு

கழகக் கிளைகளிலிருந்து உறுப்பினர்களைப் பதிவு செய்து தலைமைக் கழகத்திற்கு உரிய கட்டணத்துடன் அனுப்பப்பட்டுள்ள தாள்களைத் தலைமைக் கழகத்தில் பதிவுசெய்து, உரிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் அந்தந்தக் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளர்களாகக் கையொப்பமிட்டு அனுப்பிய தோழர்களின் முகவரிக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

அவைகளைப் பெற்றுள்ள கழகக் கிளைகளின் செயலாளர்கள் அல்லது அமைப்பாளர்கள், உரிய உறுப்பினர்கள் அனைவருக்கும் அவரவர் சீட்டினை உடனடியாகக் கொடுத்துவிடுமாறு இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கிளைகளுக்கான தேர்தல் நாளாகக் குறிப்பிட்டுள்ள நாளன்று முறைப்படி பதிவுசெய்யப்பட்டுள்ள எந்த உறுப்பினரும், தம்மிடம் உறுப்பினர் உரிமைச் சீட்டு அளிக்கப்படவில்லை என்ற குறைபாட்டுக்கு இடமில்லாத வகையில், கிளைகளின் செயலாளர்கள் அல்லது அமைப்பாளர்கள் ஆவனசெய்ய வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

— தலைமைக் கழகம் (தி.மு.க)

குத்தகைப் பாக்கியை நான்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இது, இத்திங்கள் 20-ம் நாளிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது

தவணைகள் விவரம்

இந்த அவசரச் சட்டத்தின்கீழ் குத்தகைப் பாக்கிகளை பின் கண்டபடி நான்கு சமமான ஆண்டுத் தவணைகளின் செலுத்தலாம் :—

முதல் தவணை :—1969 பிப். 1-ம் நாளுக்குள்.

இரண்டாவது தவணை :— 1970 பிப். 1-ம் நாளுக்குள்.

மூன்றாவது தவணை :— 1971 பிப். 1-ம் நாளுக்குள்.

நான்காவது தவணை :—1972 பிப். 1-ம் நாளுக்குள்.

தவணையின்படி கட்டத் தவறினால், வெளியேற்றப்படுவதற்குரிய காரணமாக அது அமையும்.

குத்தகைப் பாக்கிக்கு வட்டி கிடையாது.

1968 ஏப். 19-ம் நாளுக்குப் பிறகு ஏற்படக்கூடிய குத்தகைக்கு வழக்கமான சட்டம் பொருந்தும்.

தி. ப. தொ. மு. சங்க வெற்றி

கோவை ஒத்தக்கால் மண்டபம் பிரிமியர் 'பி மில்ஸ் வேலைக் குழுத் தேர்தலில், தி. மு. க. தொழிற்சங்கத் தோழர்கள் மாபெரும் வெற்றி பெற்றனர்.

போட்டியிட்ட நான்கு இடங்களிலும் வெற்றி பெற்றவர்கள் விவரம் :—

ஸ்பின்னிங் பிரிவு :—மாணிக்கம்.
பன்விங் பிரிவு :—நடராசன்.
ரீலிங் பிரிவு :—சாவேரியம்மாள்.
பிரப்பரேட்டரி :—செல்லமுத்து

தலைமைக் கழக அறிக்கை

கழக நிர்வாகிகளுக்கு

முக்கிய அறிவிப்பு

அண்மையில் நடைபெறவிருக்கும் கழகப் பொதுத் தேர்தல்களையொட்டி ஆங்காங்குள்ள கிளைக் கழக நிர்வாகிகள், 25-4—68-ஆம் நாளுக்குள் தங்கள் தங்கள் கிளையின் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டி, கழகத்தின் குறிப்புப் புத்தகம், கணக்குப் புத்தகம், மற்றும் கடிதப் போக்குவரத்து சம்பந்தப்பட்ட முக்கிய கட்டுகள், உறுப்பினர் பற்றிய கிளைக் கழகப் பட்டியல், கிளையின் நிதி இருப்புத் தொகை, மற்றும் மரச் சாமான்கள், படங்கள் போன்ற சொத்துக்களை இன்னின்னதென ஆய்ந்துத் தெளிந்து, அடுத்துத் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகளிடம் ஒழுங்குற ஒப்படைக்கும்வகையில் செவ்வனே முடிவுசெய்து வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அந்தந்த மாவட்ட—வட்டச் செயலாளர்களும் இதுபற்றி கிளைகளுக்கு அறிவித்து ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன், மாவட்ட — வட்டச் (சென்னையில் பகுதி) செயலாளர்களும் இதுபோன்றே தங்கள் அமைப்பைக் கூட்டி ஆவனசெய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13
18—4—68
—தலைமைக் கழகம் (தி மு.க.)

உழவர்தம் உயர்வறிவோம்!

கிராமங்களின் நலன் காப்போம்

செங்கற்பட்டு, ஏப். 19—

"'நகரம் மட்டும் வாழ்ந்தால்—வளர்ந்தால் போதும்' என்று நினைப்பவர்களல்லர் — இன்றையத் தமிழக அமைச்சர்கள்!

"கிராமம்தான் நகரத்தின் முதுகெலும்பு! உழவர் பெருங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் விடும் மூச்சால்—சிந்தும் வியர்வையால்— உழைப்பால்தான் நகரம் உயருகிறது! இதை உணர்ந்தது இன்றையத் தமிழக அரசு!

"ஐந்தாண்டுத் திட்டங்களின் பலனை ஏழைகள் இன்னும் அனுபவிக்கவில்லை'என்பதை நாங்கள் மட்டும் கூறவில்லை—திட்டத்தைத் தீட்டியவர்களே கூறுகிறார்கள்— ஒப்புக்கொள்ளுகிறார்கள்! இன்றையத் தமிழக அரசு, திட்டங்களில் உழவர்களுக்குத்தான் முதலிடம் தருகிறது! அதற்கு உறுதுணையாகத்தான், விவசாயிகளுக்குக் கிடங்குகள் கட்டித் தருவது—கடன், உரம் ஆகியவை வழங்குவதாகும்!"

--அமைச்சர் மு. கருணாநிதி

காங்கிரசாரின் பொய்ப் பிரசாரம்

கழகக் கூட்டத்தில் மறுப்பும் விளக்கமும்

கரிவலம்வந்தநல்லூர் எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இராசபாளையம் மணி-சாமி குழுவினரின் கலா நிகழ்ச்சி, தி. மு. க. துணைச்செயலாளர் கு. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

திருவில்லிபுத்தூர் வட்டத் துணைச்செயலாளர் கதிரேசன், எம். ஜி. ஆர். மன்ற உறுப்பினர் ப. கதிர்காமன் ஆகியோர் பேசினர்.

கரிவலம்வந்தநல்லூர் தி. மு. க. செயலாளரும் சங்கரன்கோயில் வட்டத் துணைச்செயலாளருமான கா மாரியப்பன், சத்தியவாணி முத்து மன்றத் திறப்பு விழாவுக்குச் சென்ற இடத்தில் நடந்த கலவரத்தைப் பற்றியும், கொள்முதலில் அரசுக்குக் கெட்ட பெயர் உண்டு பண்ணச் சிலர் முனைந்திருப்பதையும் விளக்கிக் கண்டித்துப் பேசினர்.

5—4—68 அன்று நடந்த காங்கிரசுப் பொதுக்கூட்டத்தில், கரிவந்தநல்லூரில் நடந்த சீரணித் துவக்க விழாவில் தமிழக அரசின் பணம் ரூ. 450-வரை செலவழித்ததாகவும், நாலைந்து கூடை மண்ணை அள்ளிப் போட்டுவிட்டதோடு அரசாங்கப் பணத்தை வீண் செலவு செய்ததாகவும் பா. சேதுராமலிங்கம் என்ற காங்கிரசுக்காரர் பேசினர்; அதை மறுத்து, சீரணிப் படைத் தலைவர், கா. மாரியப்பன் பேசுகையில், செலவு செய்த பணம் ரூ. 118.45-தான் என்றும், அந்தப் பணமும் அரசுப் பணம் அல்ல என்றும், சங்கரன்கோயில் யூனியனில் நன்கொடையாக வசூல் செய்த பணமே செலவழிக்கப்பட்டது என்பதையும் புள்ளிவிவரத்தோடு கூறினர்.

தில்லை வில்லாளன் டில்லி பயணம்

சிதம்பரம், ஏப். 19—

நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் தில்லை வில்லாளன், இத்திங்கள் 29-ம் நாள் பதவி உறுதி எடுத்துக்கொள்வார்.

சிதம்பரத்திலிருந்து அவர் 24—9—68 இரவு 7 மணிக்கு மதுரை - சென்னை பார்சல் பாசஞ்சரில் புறப்பட்டு சென்னையடைந்து 25—4—68 இரவு 8 மணியளவில் சென்னை மத்திய இரயில் நிலையத்திலிருந்து கிராண்ட்டிரங்க் எக்ஸ்பிரஸ் மூலம் டெல்லிக்குப் புறப்படுகிறார்.

அமெரிக்கா செல்லும் வழக்கறிஞர் நல்லுசாமி

திருச்சியில் வழியனுப்பு விழா

திருச்சி அகில உலக இளைஞர் விடுதிக் கழகத்தின் சார்பில் தில்லை நகர் மக்கள் மன்றத்தில் சமால் முகம்மது கல்லூரி பேராசிரியர் திரு. இருதயசாமி எம்.ஏ.பி.எல். தலைமையில் கழக வழக்கறிஞர் என். நல்லுசாமி அவர்களுக்கு வழியனுப்பு விழா நடைபெற்றது; வழக்கறிஞர் எஸ். ஏ. எஸ். சுப்ரமணியம் வரவேற்றார்.

திரு. நல்லுசாமி அவர்களைப் பாராட்டி கழக வழக்கறிஞர்கள் கு. இராசவேலு, என். சுப்பையா, கழகப் பொதுக்குழு உறுப்பினர் எம். எஸ். வெங்கடாசலம் ஆகியோர் பேசினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பேசிய வழக்கறிஞர் நல்லுசாமி, 'தமிழக அரசுக்கும், தமிழ் நாட்டிற்கும் பெருமைதேடித் தரும் வகையில் நடந்து கொள்வேன்" என்று கூறினர்.

மன்றச் செயலாளர் கே. வெங்கடாசலம் பி.ஏ.பி.எல். நன்றி தெரிவித்தார்.

விருந்தில் பொறியியல் வல்லுநர்களும், வழக்கறிஞர்களும் கல்லூரிப் பேராசிரியர்களும், பலதரப்பட்ட அதிகாரிகளும், மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் அண்ணா இல்லத்தில்

வங்கத் தமிழர் சங்க நிர்வாகிகள்

வங்கத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. டி. என். தங்கத்துரை, திருமதி தங்கத்துரை, துணைச்செயலாளர் செ. வீர பத்திரன் ஆகியோர், அறிஞர் அண்ணா அவர்களை இல்லத்தில் சந்தித்து—மாலை யணிவித்து சங்க நடவடிக்கைகள் பற்றி அண்ணாவிடம் உரையாடியபோது எடுத்த படம்.

ஒரு திங்களுக்கான சர்க்கரை --கோதுமை

ஒரே சமயத்தில் வாங்கிக் கொள்வதற்கு ஏற்பாடு

சென்னையில் பச்சரிசி அல்லது புழுங்கல் அரிசி ரேஷனை மே 1-ம் நாள் முதல் ஒரு மாதத்துக்கு மொத்தமாக வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்படும்.

பச்சரிசி வாங்குவோருக்கு மட்டுமே இவ்வசதி இதுவரையில் இருந்துவந்தது.

நகரில் சர்க்கரை, கோதுமை ரேஷனையும் ஒரு மாதத்திற்கு மொத்தமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

கார்டுதாரர்கள் விரும்பினால், வாரந்தோறும் தங்கள் ரேஷனை வாங்கிக்கொள்ளலாம்.

மைதா, ரவை இருப்புகள் தேவையான அளவுக்குக் கிடைத்ததும், இவற்றையும் மொத்தமாக ஒரு மாத ரேஷனாக வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

சென்னை 34-ல் உள்ள

இந்து சமய அறநிலைய நிர்வாக ஆணையாளர் முன்பாக

மனு எண் 77/68

நிர்வாக அதிகாரி, ஸ்ரீ திருமலைக் குமாரஸ்வாமி தேவஸ்தானம், பைம்பொழில், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

—மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பைம்பொழில் ஸ்ரீ திருமலைக் குமாரஸ்வாமி தேவஸ்தானம் விஷயமாக.

மேற்படி தேவஸ்தானத்திற்குச் சொந்தமானதும் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டம் பைம்பொழில் கிராமத்தில் (கருசல குடியிருப்பு) உள்ள கதவிலக்கம் 36 உள்ள வீட்டினை ரூ. 751 ஏலத் தொடக்க விலையாக நிர்ணயம் செய்து பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருட இந்து சமய அறநிலையச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22-1959) 34-வது பிரிவின்படி செய்து கொண்ட மனு (இந்த விற்பனை ஆணையரால் உறுதிப்படுத்தப்படுவதற்குட்பட்டது).

அட்டவணை

மேற்படி தேவஸ்தானத்திற்குச் சொந்தமானதும் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பைம்பொழில் கிராமத்தில் (கருசில குடியிருப்பில்) பன்னிரெண்டாவது வார்டு கதவிலக்கம் 36-ல் உள்ள வீட்டின் முழு விவரம் :

வடக்கில் — பஞ்சாயத்து சாலை
கிழக்கில் — மாடசாமி தேவரின் வீடு
தெற்கில் — பிச்சம்மாள் வீடு
மேற்கில் — அண்ணாமலை அம்மாள் வீடு

மனு எண் 77-68 டி1. தேதி: 10—4—68

1. மேற்படி மனு குறித்து ஆணையாளர் சென்னையிலுள்ள தம் அலுவலகத்தில் 5—6—68 அன்று பிற்பகல் 2 மணிக்கு விசாரணை நடத்துவார்.

2. கருத்துரைகளும், மறுப்புரைகளும் எவையேனும் இருப்பின் அவைகளை எழுத்து மூலமாக 4—6—68 அன்று அல்லது அதற்கு முன் இவ்வலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவைகளை மேற்குறிப்பிட்ட இடத்தில் நேரத்திலும் நேரிலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எஸ். பார்த்தசாரதி
ஆணையாளருக்காக

அமைப்புச் செயலாளர்

என்.வி. நடராசன்

கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், கழகப் பொதுத் தேர்தலுக்கான பணிகளைத் தலைமைக் கழகத்திலிருந்து மேற்கொள்ளவேண்டியிருப்பதால், அவர் ஒப்புக் கொண்டுள்ள சுற்றுப் பயண நிகழ்ச்சிகளில், மே 2-ம் நாள் வரை கலந்து கொள்வதற்கில்லை என்பதை அறிவித்துக்கொள்வதுடன், அடுத்து அந்நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் நாட்களைப் பின்னர் உறுதி செய்து சம்பந்தப்பட்ட தோழர்கட்கு அறிவிக்கப்படும் என்பதும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

— தலைமை நிலையம் (தி.மு.க.)

நடக்க இருப்பவை

23--4--68

சென்னை 10 வது வட்டம்

இளைஞர் முன்னேற்ற மன்ற 15-ஆம் ஆண்டு விழா ; மாலை 7-மணிக்கு மணிகண்ட முதலி 6-வது தெருவில் ; தலைவர் : டி. கே. சாமி ; பேசுவோர் : அமைச்சர் மு. கருணாநிதி, நீல நாராயணன், மவளவண்ணன் (துணை மேயர்), டி. வெங்கடேசன் எம்.சி., மற்றும் பலர்.

கோபி

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெரியார் திடலில்; பேசுவோர் : மு. சின்னசாமி எம்.எல்.ஏ., கே. எஸ். ஆனந்தன் பி.காம்.,பி.எல்., வி. வி. வெங்கடாசலம் பி.எஸ்சி.,பி.எல்., மற்றும் பலர்.

புதுக்கோட்டை

22-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு இராச கோபாலபுரம் 3-ம் வீதியில் ; தலைவர் : கா. ரெங்கசாமி ; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ,, சிவ. பாலகிருட்டிணன், எம். எஸ். அப்துல் மஜீத், வே. மு. குமார் பி.ஏ., பெ. வாசு எம்.சி. ஜி. வெங்கடாசலபதி, எம்.சி., மற்றும் பலர்.

சாங்கிராப்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அண்ணா திடலில் ; தலைவர் : கு. பழனியாண்டி ; பேசுவோர் : வீ. சா. இளஞ்செழியன் எம்.எல்.ஏ., பசுமலை க. தங்கராசு, ஏ. பி. இராசு, துரைபெருமாள், எல். எஸ். மாறன், க. சண்முகம், ஆர். எம். சொக்கலிங்கம், எம். பிச்சை, டி. எஸ். திருமேனி, என். எஸ். தங்கவேலு, எம். கே. வேலு, எம். முத்துச்சாமி, பி. பழனிச்சாமி, அ. சாமியய்யா.

மின்பாறையில் கழகக் கூட்டம்

மின்பாறை தி. மு. க. சார்பில் கலைவாணர் திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது ; மு. சுப்பையன் தலைமை தாங்கினார் ; தோழர்கள் அசோகன் பி. ஏ., அறிவரசு ஆகியோர் அண்ணா ஆட்சியின் ஓராண்டுச் சாதனை குறித்துப் பேசினர்.

அன்பு ததும்ப வரவேற்பு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அண்மையில் நிகழ்ந்த நீக்ரோக்கள் கலவரத்தால் பல இடங்களில் கட்டிடங்கள் சீர்குலைந்து கிடந்ததையும் அண்ணா அவர்கள் பார்த்தார்கள் ; இடிந்துகிடந்த ஒரு கட்டிடத்துக்குள்ளும் அண்ணா அவர்கள் சென்று பார்த்தார்கள்.

இதற்கு முன்பாக அண்ணா அவர்கள், ஐந்தாவது அவென்யூ பகுதியில் உள்ள 'சோனு' என்ற இடத்துக்கும் சென்று சிறிது நேரம் பார்வையிட்டார்கள். இந்தியக் கைத்தொழிற் பொருள்களும், கைத்தறித் துணிகளும் விற்கப்படும் இடமாகும் அது.

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளும், தென்னிந்திய பித்தளைப் பாத்திரங்களும், வாளிகளும், நியூயார்க் நகரில் பிரபலமடைந்து வருவது குறித்து அண்ணா அவர்கள் ஆர்வத்துடன் கேட்டு மகிழ்ந்தார்.

நியூயார்க் நகரிலேயே அரசு வர்த்தகத் துறைக் கடைகள் மிகுந்துள்ள 'ப்ளுமிங் டால்ஸ்' பகுதிக்கும் அண்ணா அவர்கள் சென்று பார்வையிட்டார்.

பிறகு, நியூயார்க் நகரில் பல பகுதிகளையும் காரில் சென்றபடியே பார்த்தார்.

நியூயார்க் நகரிலேயே மிகவும் உயர்ந்த கட்டிடமான எம்பயர் அரசாங்க மாளிகையின் உச்சிக்கு அண்ணா அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள் ; அங்கிருந்தபடி அண்ணா அவர்கள், எழில்மிகு நியூயார்க் நகரின் எழுபது இலட்சம் மக்கள் வாழும் குடியிருப்புக்களை மிகத் தெளிவாகக் கண்டு களித்தார்கள்.

நேற்றிரவு அண்ணா அவர்கள் இரயில் மூலம் பப்பலோ நகருக்குப் புறப்பட்டு நியூஹேவன் நகரைச் சேர்ந்தார்கள்.

நேற்று மாலை நயாகரா அருவிக் காட்சியைக் கண்டுவிட்டு கனெக்டிக்கட் மாநிலத்தின் நியூஹேவன் நகருக்குச் சென்றார் அறிஞர் அண்ணா ; அங்கே ஒரு பண்ணைக் குடும்பத்துடன் தங்கியிருந்து விருந்துண்டார்.

ஐ நா. மன்றத்தின் இந்தியத் தூதுக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களும், இராசதந்திரிகள பலரும் மகிழ்ச்சியுடன் கூடியிருந்து அண்ணா அவர்களை வரவேற்றனர்.

நியூயார்க்கில் உள்ள இந்திய கான்சல்-ஜெனரல் டாக்டர் எஸ். குப்தா, அவரது துணைவரான டி ஹேஜ்மாதி, பீ. பி. அகர்வால், பிற அலுவலர்களும் அண்ணா அவர்களை வரவேற்றனர்.

புன்னகையுடன் விமானத்திலிருந்து இறங்கிய அண்ணா அவர்கள், நிலையத்துள் வந்ததும், தென்னகத்தில் பிறந்து அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் வரவேற்ற காட்சியே, அவர் பெருமைக்கோர் சாட்சி !

'சென்னை வரவேற்பு' என்று சொல்லும் அளவில் அந்த வரவேற்பில் தமிழ் மணம் கமழ்ந்தது !

இதற்கு முன்னாலே யார் யாரோ அமெரிக்காவுச்கு வருவார்கள் ; தலைமை அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள் ; மததிய அமைச்சர்கள்—பன்னாட்டு இந்தியத் தூதுவர்கள் — என்று யார் யாரோ நியூயார்க் வந்திருக்கிறார்கள் ; அப்போதெல்லாம் அந்தத் துறை பெரும் புள்ளிகள் மட்டுமே வருவார்கள் ; ஆனால், ஏழை பங்காளர் அண்ணா அவர்களை வரவேற்க வந்த கூட்டமே அவரை இனம் காட்டியது.

கேள்விகளை நிதானமாக வாங்கிக்கொண்டு அமைதியாகப் பதிலளித்த அந்தப் பான்மையைப் பத்திரிகையாளர் பாராட்டுகிறார்கள்.

"மொழிச்சிக்கல் போன்ற தகராறுக்குரிய பிரச்சினைகளை இன்னம் 25 ஆண்டுகளுக்குத் தள்ளிப்போடுவதுதான் இந்தியாவின் ஒற்றுமையைக் காக்கும் வழி"

என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை, இந்தியாவின் நாளிதழ்கள் எல்லாம் முக்கியத்துவம் தந்து வெளியிட்டிருக்கின்றன.

அண்ணா அவர்களின் நிகழ்ச்சிகளைத திரு பார்த்தசாரதி அவர்களே முன்னின்று வரையறுத்து நடத்துகிறார். வெள்ளியன்று மாலையில், ஐ. நா. பொதுமன்ற துணைச் செயலாளர் சி. வி. நரசிம்மன் அளித்த தேநீர் விருந்தில் ஐ. நா. பொதுச்செயலாளர் திரு. ஊதாண்ட் அவர்களை அண்ணா சந்தித்தார்.

பின்னர் 'புது இந்திய மாளிகை'யில் நடைபெற்ற விருந்தில் கலந்துகொண்டார்.

சனிக்கிழமை முழுமையும் நியூயார்க் நகரின் பல்வேறு இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு இரவே 'பாபலோ' நகருக்கருகே உள்ள நயாகரா அருவிக்கரைக் காட்சி காணச் சென்றார்.

அரசியல் கட்சிகளுக்கு வெளிநாட்டுப் பணம்

தடுத்து நிறுத்துவது எப்படி ?-- அமைச்சர் சவான் விளக்கம்

புதுடில்லி, ஏப் 20—

"எந்த அரசியல் கட்சியேனும் வெளிநாடுகளிலிருந்து நேரிய வழிகளில் பணவுதவி பெற்றால் அதைத் தடுக்கவோ, அதுபற்றி விசாரணை நடத்தவோ இயலாது; ஆனால், அரசியல் நடவடிக்கைகளுக்காக, சட்டவிரோதமான முறையில் பணம் பெற்றால் அதுபற்றி நிச்சயம் விசாரிக்க முடியும்"

என்று, உள்துறை அமைச்சர் திரு. சவான், மக்களவையில் கூறினார்.

"பத்திரிகைகள், பொதுவுடைமை நாடுகளிலிருந்து மட்டுமல்லாமல் பொதுவுடைமையல்லாத நாடுகளிலிருந்தும் விளம்பரங்கள் பெறுகின்றன ; சட்டவிரோதமாயிருந்தாலன்றி இது பற்றி விசாரிப்பதற்கில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

"சட்ட விரோதமாகவோ, இரகசியமாகவோ வெளிநாடுகள் இந்நாட்டு அரசியல் கட்சிகளுக்குப் பணம் கொடுக்க முனைந்தால், அது, இந்நாட்டுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியதும், அரசியல் தலையீடுமாகும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை" என்று அவர் மேலும் கூறினார்.

கேரள நபருக்கு சீனத்துப் பணம் !

"கேரளத்தைச் சேர்ந்த கோழிக்கோட்டில் வசிக்கும் குன்னிக்கல் நாராயணன் என்ற நபருக்கு, புதுடில்லியிலுள்ள சீனத் தூதரகத்திலிருந்து நான்கு முறை பணம்—மணியார்டர்மூலம் வந்ததாகவும், ரூ. 100 முதல் ரூ. 500-வரை பல்வேறு தொகைகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் கேரள அரசு கொடுத்த தகவலின்படி தெரியவருகிறது" என்று உள்துறைத் துணை அமைச்சர் திரு. வி. சி. சுக்லா, மக்களவையில் கூறினர்.

"இப்படி மணியார்டர் வந்திருப்பதை மட்டும் வைத்துக்கொண்டு சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை ; எனினும், இத்தகைய நடவடிக்கைகள் குறித்து கண்காணிக்கப்பட்டுவருகிறது" என்று அவர் மேலும் கூறினார்.

சென்னை 34-ல் உள்ள

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் 76/68

நிர்வாக தர்மகர்த்தா, ஸ்ரீ ராஜ கோபாலஸ்வாமி தேவஸ்தானம், தோப்புத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

—மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் தோப்புத் தெரு ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி தேவஸ்தானம் விஷயமாக.

மேற்படி தேவஸ்தானத்திற்குச் சொந்தமானதும் கும்பகோணம் நெ. 11, பிரம்மன் கோயில் தெருவில் இருக்கும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஓட்டுவில்லை கட்டுக்கோப்பு வீட்டினை, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நெ. 12, பிரம்மன் கோயில் தெருவில் இருக்கும் திரு. கே. ஆர். வெங்கடராமய்யர் குமாரர் கே.வி. ராம அய்யருக்கு ரூ. 2,500 பெற்றுக் கொண்டு விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருட இந்து சமய அறநிலையச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22-1959) 34-வது பிரிவின்படி செய்து கொண்ட மனு.

அட்டவணை

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் உப வட்டத்திற்த டவுன் முனிசிபல் தென் பாகம் 2-வது டிவிஷன் 5-வது வார்டு பிரம்மன் கோயில் தெருவு தென் சரகில் இருக்கும் மேற்படி தேவஸ்தான ஓட்டுவில்லை வீட்டின் முழு விவரம் :

1.	பண்டாகி ராமய்யா செட்டியார் சந்திலுள்ளள திரு. கே.வி. இராமய்யர் வீட்டிற்கு	கிழக்கு
2.	ராமமூர்த்தி ஐயர் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வீட்டிற்கு	மேற்கு
3.	சுகாதார சந்திற்கு	வடக்கு
4.	பிரம்மன் கோயில் தெரு விதிக்கு	தெற்கு

இந்த நான்கெல்லைக்குட்பட்டதும் கதவிலக்கம் எண் 11 புதிய கதவிலக்கம் 15 டவுன் சர்வே எண் 1768 நெம்பராகிய கிழமேலடி 40-ம் தென்வடலடி 64-ல் உள்ள கீழ் நிலமுட்பட மேல் ஓட்டுவில்லை கட்டுக்கோப்பு வீடு.

மொத்த விலை ரூ. 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு).

மனு எண் 76-68 டி1. தேதி: 10—4—68

1. மேற்படி விஷயம் குறித்து ஆணையாளர் சென்னையிலுள்ள தம் அலுவலகத்தில் 5—6—68 அன்று பிற்பகல் 2 மணிக்கு விசாரணை நடத்துவார்.

2. மறுப்புரைகளும் கருத்துரைகளும் இருப்பின் அவைகளை எழுத்து மூலமாக 4—6—68 அன்று அல்லது அதற்குமுன் இவ்வலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவைகளை மேற்குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் நேரிலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எஸ். பார்த்தசாரதி
ஆணையாளருக்காக

மே நாள் விழா

அனைத்துக் கட்சி-- தொழிற் சங்க அமைப்புகள் கூட்டம்

தமிழ் நாடெங்கும் மேநாள் விழாவை அனைத்துக் கட்சிகளும் தொழிற்சங்க அமைப்புக்களும் ஓரணியாய்த் திரண்டு சிறப்புற நடத்துவதற்காக, 19—4—68 அன்று சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள்—தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தைத் தொடர்ந்து 23—4—68 காலை 10 மணிக்கு சென்னை மவுண்ட் ரோடு இராஜாஜி மண்டபம் அருகில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இதனையே அழைப்பாகக் கொண்டு ஆலோசனைக் கூட்டத்திற்கு வருகை தந்து சிறப்பு செய்யுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என். வி. நடராசன்
கன்வீனர், மே நாள் விழா
(சர்வ கட்சிக் குழு)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.